## தும்மலின்போது ஓதவேண்டிய துஆ

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் அபூ ஹுரைரஹ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உங்களில் எவருக்கும் தும்மல் வரும்போது அவர் أَلْحَمْدُ لِلّٰهِ என்று கூறவேண்டும். அதனைச் சொல்லக்கேட்டவர் يَرْحَمُكَ اللّٰهُ என்று கூறவேண்டும். தும்மியவர் இதனைக்கேட்டு يَهْدِيْكُمُ اللّٰه ويُصْلِحُ بَالَكُمْ என்று கூறவேண்டும். (புக்ஹாரி).

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: தும்மல் வரும்போது கையினால் அல்லது ஒரு துணியினால் முகத்தை மூடிக்கொண்டு தும்மலின் அதிர்வை அதனுள் தடுத்துவிடவேண்டும். (அபூ தாவூத், திர்மிதி)

ஹஜ்ரத் சலமஹ் பின் அக்வஉ (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு முறை இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு அருகில் ஒருவர் தும்மியபோது அவர்கள் ﷺ يَرْحَمُكَ اللّٰهُ என்று கூறினார்கள். ஆனால், அவர் மூன்றாவது முறையாகத் தும்மியபோது கூறினார்கள், உங்களுக்கு ஜலதோஷம் உள்ளது. (திர்மிதி)

* * *

www.uzairfalahi.com